# முதல் திருப்புதல் தேர்வு - 2024

தேர்வு எண் | | | | | | |

காலம் : 3.00 மணி **XI - வணிகவியல்** மதிப்பெண் : 90

பகுதி - 1

குறிப்பு: 1) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். (20×1=20)
2) சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.

1. வியாபாரம் மற்றும் வணிகம் ———— பேரரசில் பொதுவானவையாக இருந்தது
அ) பல்லவர் ஆ) சோழர் இ) பாண்டியர் ஈ) சேரர்
2. மருத்துவர் தொழில் என்பது ————
அ) வேலை வாய்ப்பு ஆ) தொழில் இ) சிறப்புத் தொழில் ஈ) தனியார் வணிகம்
3. அதிக அளவு அபாயத்தைக் கொண்டது ————
அ) உற்பத்தித் தொழில் ஆ) வணிகம்
இ) வியாபாரம் ஈ) இவை அனைத்தும்
4. தனியாள் வணிகத்தின் மிகப்பெரிய குறைபாடு
அ) வரையறு பொறுப்பு ஆ) வரையறாப் பொறுப்பு
இ) அமைப்பெளிமை ஈ) விரைவான முடிவு
5. கூட்டாண்மை உண்டாக்கப்படுவது
அ) ஒப்பந்தத்தால் ஆ) கூட்டாளிகளிடையே உறவு
இ) அரசின் வழிகாட்டல் ஈ) நட்பின் அடிப்படையில்
6. நிறுமத்தின் இயக்குநரை கீழ்கண்டவற்றுள் யார் தேர்ந்தெடுக்கிறார்கள்?
அ) கடனீந்தோர் ஆ) கடனாளிகள்
இ) கடனீட்டு பத்திரதாரர் ஈ) பங்குதாரர்கள்
7. கோகோ கோல நிறுவனத்தை எதற்கு உதாரணமாய் கூறலாம்?
அ) பன்னாட்டு நிறுமம் ஆ) அரசு நிறுமம்
இ) இணை நிறுமம் ஈ) பொதுத்துறை
8. இந்திய ரிசர்வ் வங்கி ஏப்ரல் 1 ———— ஆண்டு முதல் தன் பணிகளைத் தொடங்கியது
அ) 1936 ஆ) 1935 இ) 1934 ஈ) 1933
9. எந்த ஒரு வகையான சேவைகள் வணிக வங்கியால் வழங்கப்படுவதில்லை
அ) வணிகத் தகவலைச் சேகரித்தல் மற்றும் அளித்தல்
ஆ) ரொக்கக்கடன் இ) வங்கி மேல்வரைப்பற்று
ஈ) உண்டியல்களைத் தள்ளுபடி செய்தல்
10. பண்டகக் காப்பகம் ———— தடையை நீக்குகிறது
அ) ஆள்சார் தடை ஆ) காலத் தடை
இ) இடர்ப்பாட்டுதடை ஈ) அறிவுத் தடை
11. எந்த வகையான பொறுப்புணர்வு சமுதாயத்திற்கு நன்மை தரக்கூடியது?
அ) சட்டம் ஆ) நெறிமுறை இ) ஒழுங்குணர்வு ஈ) பொருளாதார
12. நேர்மை பங்குதாரர்கள் ஒரு நிறுமத்தின் ————
அ) கடனீந்தோர் ஆ) உரிமையாளர்கள்
இ) கடனாளிகள் ஈ) இவை எதுவுமில்லை
13. சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் அளிக்க ———— வேறுபட்ட முறைகள் உள்ளன
அ) 1 ஆ) 2 இ) 3 ஈ) 4
14. உற்பத்தியாளருக்கும், நுகர்வோருக்கும் இடையே இணைப்பு சங்கிலியாக இருப்பது
அ) வியாபாரம் ஆ) தொழிற்சாலை இ) வணிகம் ஈ) வர்த்தகம்
15. வழங்கல் வழியில் உள்ள முதல் இடைநிலையர் யார்?
அ) மொத்த வியாபாரி ஆ) உற்பத்தியாளர்
இ) சில்லறை வியாபாரி ஈ) வாடிக்கையாளர்கள்
16. பொருந்தாத இணையைக் கண்டறிக.
அ) C2B - மான்ஸ்டர் டாட்காம்
ஆ) B2B - ப்ளிப்கார்ட்
இ) B2C - அலிபாபா
ஈ) C2C - ஓ எல் எக்ஸ்
17. சட்டத்தால் நடைமுறைப்படுத்தப்படும் ஓர் உடன்படிக்கை
அ) ஒப்புக்கொண்ட வாக்குறுதி ஆ) நிறைவேற்றக்கூடிய ஏற்பு
இ) ஒப்பந்தம் ஈ) ஏற்றுக்கொள்ளப்பட்ட முனைவு
18. உள்நாட்டு வியாபாரத்தை ———— வகைகளாகப் பிரிக்கலாம்
அ) இரண்டு ஆ) மூன்று இ) ஐந்து ஈ) நான்கு
19. ஒரு நாட்டில் குடியிருப்போருக்கும் மற்றொரு நாட்டில் குடியிருப்போருக்கும் இடையே நடைபெறும் நடவடிக்கைகள் பதிவு செய்யப்பட்ட அறிக்கை ————
அ) பெறுதல் செலுத்துதல் அறிக்கை ஆ) செலுத்தல் சமநிலை
இ) கணக்கியல் அறிக்கை ஈ) வாணிப சமநிலை



Scanned with OKEN Scanner
Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

20. உலக வர்த்தக அமைப்பின் தலைமையகம் அமைந்துள்ள இடம் ________
அ) ஜெனிவா ஆ) நியூயார்க் இ) பிரேசில் ஈ) இலண்டன்

பகுதி - 2

***குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 30க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.*** ***(7x2=14)***

21. தனியாள் வணிகர் என்று அழைக்கப்படுபவர் யார்?
22. பண்டக காப்பகங்களின் வகைகள் ஏதேனும் நான்கினை பட்டியலிடுக.
23. நாளங்காடி என்றால் என்ன?
24. பெறுநிறுவன ஆளுகை - வரைவிலக்கணம் தருக.
25. தொழில் செயல்முறை புறத்திறனீட்டல் (BPO) என்றால் என்ன?
26. இடையிலையர் என்பவர் யார்?
27. குறு நிறுவனங்களுக்கு இரண்டு எடுத்துக்காட்டுத் தருக.
28. வருமான வரி என்றால் என்ன?
29. உலக வர்த்தக அமைப்பு (WTO) என்றால் என்ன?
30. A என்பவர் தன்னுடைய கட்டிடத்தை ரூ.10,00,000க்கு B என்பவருக்கு விற்பனை செய்ய ஒப்புக் கொள்கிறார். அதே போல B என்பவரும் கட்டிடத்தை வாங்க ஒப்பு கொள்கிறார். இது எத்தகைய ஒப்பந்தம்? விளக்குக.

பகுதி - 3

***குறிப்பு: எவையேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 40க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.*** ***(7x3=21)***

31. சரக்கு மற்றும் சேவை வரியின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் 3)
32. இருதரப்பு வாக்குறுதிகளின் வகைகள் யாவை?
33. இந்தியாவின் முக்கிய ஏற்றுமதி மற்றும் இறக்குமதி பொருட்களுக்கு மூன்று எடுத்துக்காட்டுகள் தருக.
34. கால அளவின் அடிப்படையில் தொழில் நிதியின் ஆதாரங்களின் வகைகளைக் குறிப்பிடுக.
35. சமூகப் பொறுப்புணர்வின் வகைகள் ஏதேனும் மூன்றினை பட்டியலிடுக.
36. கப்பல் வாடகை ஒப்பாவணம் என்றால் என்ன?
37. இந்திய ரிசர்வ் வங்கியின் நிர்வாகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் யார்?
38. இந்துக் கூட்டு குடும்ப தொழிலின் சிறப்பியல்புகள் ஏதேனும் மூன்றினை விவரிக்கவும்.
39. சிறு குறிப்பு வரைக. அ) தொழில் ஆ) சிறப்புத்தொழில்
40. சிறு குறிப்பு வரைக. அ) செலுத்துகைக்கு பிறகு ஆவணங்கள் ஆ) ஏற்புக்கு பிறகு ஆவணங்கள்

பகுதி - 4

***குறிப்பு: அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.*** ***(7x5=35)***

41. அ) பொது கழகத்தின் ஏதேனும் மூன்று நிறைகள் மற்றும் குறைகளை விளக்கவும்.
***(அல்லது)***
ஆ) குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள் யாவை?
42. அ) உற்பத்தி தொழில், வணிகம் மற்றும் வியபாரம் - ஓர் ஒப்பீடு செய்க.
***(அல்லது)***
ஆ) அமைப்பு முறையேட்டில் அடங்கியுள்ள பொருளடக்கங்கள் யாவை?
43. அ) ஒப்பந்தம் மற்றும் உடன்படிக்கைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
***(அல்லது)***
ஆ) தொழில் நெறிமுறைகளின் அடிப்படைக் கூறுகளை விவரிக்கவும்.
44. அ) பல்வேறு வகையான வங்கிகளை செயல்பாடுகளின் அடிப்படையில் விவரிக்கவும். (ஏதேனும் 5)
***(அல்லது)***
ஆ) வருமான வரியின் அடிப்படை கருத்துக்கள் எவையேனும் ஐந்தினை விளக்கி எழுதுக.
45. அ) உலகளாவிய வைப்பு இரசீதையும் அமெரிக்க வைப்பு இரசீதையும் வேறுபடுத்துக.
***(அல்லது)***
ஆ) சில்லறை வியாபாரிகளின் வகைகளை விவரிக்கவும். (ஏதேனும் 5)
46. அ) வெளிநாட்டு வியாபாரத்தின் பல்வேறு வகைகளை விவரிக்கவும்.
***(அல்லது)***
ஆ) செலுத்தல் சமநிலையின் சிறப்பம்சங்கள் ஏதேனும் ஐந்தினை விவரிக்கவும்.
47. அ) போக்குவரத்தின் பல்வேறு வகைகளை விவரி.
***(அல்லது)***
ஆ) பன்னாட்டு நாணய நிதியத்தின் (IMF) பணிகளைக் குறிப்பிடுக.



Scanned with OKEN Scanner

Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com